**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித்திங்கள் 25 -ஆம் நாள்.

**I.A.No.407/2024**

**in**

**O.S.No.79/2020**

ரமேஷ் .... மனுதாரர் /வாதி

// எதிர்//

கே.எஸ்.துரைசாமி .... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கதாக.பொற்செழியன், B.A, B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்துகொள்ள சாட்சிப்பட்டியலை உரிய கெடுவிற்குள் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து இப்பால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை ஏற்று வாதி தரப்பு கூடுதல் சாட்சியமாக விசாரணை செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி,

மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக மனுதாரரை விசாரணை செய்து வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்துகொள்ள உரிய கெடுவுடன் சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாமல் போய் விட்டது. வேண்டுமென்றோ அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல.

மனுவில் கண்டுள்ள சாட்சியானது வாதி தரப்பு கட்சியினை நிரூபிக்கக்கூடிய அவசிய சாட்சிகள் ஆகும். அவர்களை வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்துகொள்ள சாட்சிபட்டியலை உரிய கெடுவிற்குள் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து இப்பால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை ஏற்று வாதி தரப்பு கூடுதல் சாட்சியமாக விசாரணை செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும்.

எனவே வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்துகொள்ள சாட்சிபட்டியலை உரிய கெடுவிற்குள் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து வாதி தரப்பு கூடுதல் சாட்சியமாக விசாரணை செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மறுப்பதால் அவற்றை மனுதாரர்/வாதியே தக்க சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டிருக்கிறார். மனு இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்கள்

குறித்து சாட்சியம் அளிக்க வேண்டும் என்பது குறித்து உரிய விளக்கங்களோ தெளிவாக குறிப்பிடப்படாமல் வேண்டுமென்று ஒரு பொய்யான காரணத்தை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்க கூடியதல்ல. அதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலை நிற்க கூடியதல்ல.

மனுதாரர்/வாதி வழக்கினை நிரூபிக்க போதிய சாட்சிகளோ, சான்றாவணங்களோ இல்லாத நிலையில் வழக்கிற்கு சற்றும் சம்பந்தமில்லாத நபர்களை வழக்கின் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி ஓர் பொய்யான காரணத்தை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்க கூடியதல்ல. உண்மையில் மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காகவும், வழக்கு நடவடிக்கையினை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்க கூடியதில்லை.

மேலும் மனு அபிடவிட் பாராக்களில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் மனுவின் தோதுவிற்காக மனுதாரர்/வாதியால் புனையப்பட்ட கற்பனையேயின்றி வேறில்லை. உண்மை விபரங்களை மறைத்து Malafide ஆகவும் Without Clean hands உடனும் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. எனவே ஒரு பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்க தக்கதல்ல. அபிடவிட்டில் கண்டுள்ள ஒவ்வொரு சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி மறுக்கிறார். எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u>:-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம், சுவாதீனம் செய்து வருவதற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடையூறும் சட்டவிரோதமாக காலி செய்து வாதியை வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவின் சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்களை விசாரிப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவை அனுமதிக்கக் கோரி, மனு தாக்கல் செய்துள்ள எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்துள்ள போதிலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் உள்ளது என்பதை கருத்திற் கொண்டும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம்

செய்ய ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5)** முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (11.11.2024) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித்திங்கள் 25 -ஆம் நாள்.

**I.A.No.407/2024**

**in**

**O.S.No.79/2020**

திரு.ரமேஷ், வயது 49, த/பெ.வடிவேல், வசிப்பிடம் தோப்புத் தெரு, ஆலத்தூர் கிராமம், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

..... மனுதாரர் /வாதி

/எதிர்/

திரு.கே.எஸ்.துரைசாமி, வயது 65, த/பெ.சாம்பசிவ அய்யர், வசிப்பிடம் குன்னியூர் பண்ணை இல்லம், அங்காளம்மன் கோவில் தெரு, மன்னார்குடி டவுன், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

..... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவில் மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்துகொள்ள சாட்சிப்பட்டியலை உரிய கெடுவிற்குள் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து இப்பால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை ஏற்று வாதி தரப்பு கூடுதல் சாட்சியமாக விசாரணை செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 18.09.2024

மனு கோப்பிற்கு எடுத்த நாள் : 19.09.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கதாக.பொற்செழியன், B.A, B.L., அவர்களும், எதிர்மனுதாரர்

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.